بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : தாஹா பள்ளிவாசல் – சிங்கப்பூர்**

September 27 2013

**தமிழாக்கம் : மவ்லவி N. ஸியாவுல் ஹக் சாஹிப்**

# சிங்கப்பூர், இந்தோனேஷியா மற்றும் மலேசியாவில் அஹ்மதிய்யத்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இது அல்லாஹ்வின் அருளாகும். அவன் எனக்கு மீண்டும் ஒருமுறை இப்பகுதியிலுள்ள அஹ்மதிகளைச் சந்திப்பதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளான். மலேசியா மற்றும் இந்தோனேஷியாவில் ஜமாஅத் என்ற வகையில் நிலைமைகள் எவ்வாறு உள்ளதென்றால் நான் அங்கு செல்வது கஷ்டமாகும். இதனால் சிங்கப்பூரில் அல்லாஹ் இந்த மக்களைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கின்றான். அல்லாஹ் இந்த நாடுகளிலும் விரைவில் இப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்துவானாக! ஜமாஅத்திற்கும் இதற்கான வசதியினை வழங்குவானாக! மேலும் காலத்தின் கலீஃபா அவர்கள் அங்கு செல்வது எளிதாக ஆகட்டுமாக!

இம்முறை இந்தோனேஷியா மற்றும் மலேசியாவிலிருந்து மூவாயிரத்திற்கும் அதிகமாக அஹ்மதிகள் வந்திருக்கின்றனர். இதில் பெரும்பாலார் இந்தோனேஷிய அஹ்மதிகள் ஆவார்கள். இதனைத் தவிர தாய்லாந்து, பர்மா, மியான்மர், பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களிலிருந்தும் அஹ்மதிகள் வந்துள்ளனர். அஹ்மதியல்லாத சிலரும் வந்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும் இது அல்லாஹ்வின் அருளாகும். அவன்தான் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளான். இந்தப் பகுதியில் இந்தோனேஷியா எப்படிப்பட்ட நாடு என்றால், அங்கு அஹ்மதிய்யத்தின் காரணமாக ஜமாஅத் உறுப்பினர்கள் மீது அதிக அளவு அநீதியிழைக்கப் –படுகின்றது. சில சஹாதத்துகளும் நடைபெற்றுள்ளன. இவை அனைத்தும் அரசாங்க அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றுள்ளன. ஒருமுறை நடந்தது. பிறகு முடிந்து விட்டது என்பதல்லாமல் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. நான் முதன் முறையாக ஏறக்குறைய ஏழு வருடங்களுக்கு முன்பு இங்கு வந்திருந்தேன். அப்போதும், சில நாட்களுக்கு முன்பு இந்தோனேஷியாவில் அஹ்மதிகள் மீது அநீதியிழைப்பதற்கான ஒரு தொடர் ஆரம்பிக்கப்பட்டது. பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடந்தது. ஜமாஅத் பொருள்களை உடைத்தனர்; சேதம் விளைவித்தனர். அஹ்மதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு இழப்பு ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும் அதன் பின்னரும் பகைமை மிகவும் அதிகமாகிக் கொண்டே இருந்தது. எந்த அளவு அநீதியாக, காட்டுமிராண்டித்தனமாக காவல்துறையின் கண்காணிப்பில் அஹ்மதிகள் சஹீதாக்கப்பட்டனர் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இது எப்படிப்பட்ட அநீதி என்றால் நீதியினை விரும்பக்கூடிய உள்ளூர் ஊடகங்களும் இந்த அநீதிக்கு கண்டனம் தெரிவித்தனர். இன்றைய நாட்களில் ஊடகங்களின் வசதியினால் உலகம் எவ்வளவு அருகில் உள்ளதென்றால் அநீதி ஏற்பட்டவுடனே உலகிலுள்ள மூலை முடுக்குகள் வரை அது பரவி விடுகின்றது. அதாவது அதனது காட்சிகள் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதர் வரை சென்றடைந்து விடுகின்றது. பிறகு உலகின் பார்வை அதன் மீது படுகின்றது. இதற்கு எதிராக குரல்களும் எழுப்பப்படுகின்றன.

எவ்வாறாயினும், அந்த அனைத்து அமைப்பினருக்கும், ஜமாஅத்திற்கு ஆதரவாக அந்த அநீதியாளர்களுக்கு எதிராக குரல் எழுப்பிய அனைவருக்கும் நாம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் ஜமாஅத்தின் மீது இழைக்கப்படும் ஒவ்வொரு அநீதிக்கும் அல்லாஹ் வேறு வகையில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றான். இந்தோனேஷியாவில் அஹ்மதிகள் மீது இழைக்கப்பட்ட இந்த அநீதியின் காரணமாக உலகில் மிகப்பெரிய அளவில் ஜமாஅத்திற்கு அறிமுகம் ஏற்பட்டது.

ஆப்பிரிக்காவில் மிகவும் தொலைவிலுள்ள ஒரு பகுதியில் இந்தோனேஷியாவில் சஹீதாக்கப்பட்ட அந்த மூன்று நபர்களுடைய வீடியோ காண்பிக்கப்பட்ட போது, அங்குள்ள ஒரு ஆலிம் இந்த வீடியோவைப் பார்த்து, இப்படிப்பட்ட ஒரு அநீதி மூஃமின்கள் மீதுதான் நடைபெறும் என தீர்மானித்து இன்று முதல் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறேன் எனக் கூறினார்.

இந்த அநீதியின் காரணமாக இந்தோனேஷியாவில் மட்டும் சில பைஅத்துகள் நடைபெறவில்லை. மாறாக உலகில் பல்வேறு இடங்களில் பைஅத்துகள் நடைபெற்றன. பாகிஸ்தானுக்குப் பிறகு இந்தோனேஷியாவில் தான் அநீதி மற்றும் கொடுமைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இங்கு அஹ்மதிகள் மீது காட்டுமிராண்டித்தனமாக அநீதியிழைக்கப் -படுகின்றது. தற்போது இந்தோனேஷியாவில் அநீதி இழைப்பது கொஞ்சம் குறைந்துள்ளது. ஆனால் பாகிஸ்தானில் இந்த அநீதி தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த அநீதி இறைவன் மற்றும் அவனது ரஸுல் (ஸல்) அவர்களின் பெயரால் இழைக்கப்படுகின்றது. படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும் என்ற போதனையை வழங்கிய அந்த இறைவனின் பெயரால் இந்த அநீதியிழைக்கப்படுகின்றது. கருணை மற்றும் நீதிக்கான போதனையை வழங்கக்கூடிய அந்த இறைவனின் பெயரால் இந்த அநீதியிழைக்கப்படுகின்றது. ரஹ்மத்துல் லில் ஆலமீனாக உள்ள அந்த ரஸுலின் பெயரால் இந்த அநீதியிழைக்கப்படுகின்றது. யுத்தத்தின் நிலையிலும் கூட அநீதியிழைப்பதைத் தடுத்த அந்த ரஸுலின் பெயரால் இந்த அநீதியிழைக்கப்படுகின்றது. கலிமா கூறியவரை கொலை செய்த தனது தோழருடன் கடினமாக கோபம் கொண்டவரது பெயரால் இந்த அநீதியிழைக்கின்றனர். அந்த சஹாபி, இந்த காஃபிர் எனது வாளின் அச்சத்தினால் தான் கலிமாக கூறினார் எனக் கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீ அவருடைய உள்ளத்தை பிளந்து பார்த்தாயா? எனக் கேட்டார்கள். அவர் அச்சத்தினால் கலிமா சொன்னாரா? உள்ளத்தினால் கலிமா சென்னாரா? என்று கேட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் பாகிஸ்தானில் எல்லை மீறிய அளவில் அநீதிகள் இழைக்கப்படுகின்றன. கலிமா சொல்லக்கூடியவர் மீது அநீதியிழைக்கப்படுகின்றது. கலிமாவின் பெயரினால் அநீதி இழைக்கப்படுகின்றது. அந்த பாகிஸ்தானிய முல்லாக்களின் தாக்கம், இந்தோனேஷியாவில் இந்த அநீதியிழைக்கக்கூடிய அல்லது மக்களை அநீதியிழைக்கத் தூண்டக்கூடிய முல்லாக்களிடமும் உள்ளது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இந்த பகைவர்கள் சேதம் விளைவிக்க முயற்சிகளைச் செய்கின்றனர். பகைவர்கள் எந்த அளவு பகைமையில் ஈடுபடுகின்றனரோ அதே அளவு அல்லது அதைவிட அதிகமாக அஹ்மதிய்யத்தில் உறுதியாக நிலைநிற்றலும் ஏற்படுகிறது. அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாம் தனது வேர்களை எங்களது உள்ளத்தில் ஊன்றியிருக்கிறது என்பதை நமது பகைவர்கள் அறிவதில்லை. எந்தவித எதிர்ப்பும், எந்தவித புயலும் எங்களது ஈமானின் உறுதியான வேர்களை எங்களிடமிருந்து பிரிக்க முடியாது. அஹ்மதிகள் இறைவனின் அருள்களைக் கண்ட பிறகு எவ்வாறு தனது இறைவனுடன் செய்த உறுதிமொழியிலிருந்து முகம் திருப்ப முடியும்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை நேசருடன் இணைந்த பிறகு ஒருவர் தனது பந்தத்தை எவ்வாறு முறிக்க முடியும்? அந்த பந்தம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸுல் (ஸல்) அவர்களுடன் உள்ள பந்தத்தை மேலும் வலுவடையச் செய்துள்ளது. இதன் காரணமாக அஹ்மதிகள் அல்லாத பிற முஸ்லிம்கள் முற்றிலும் அறியாத ஈமானில் முன்னேறுவதற்கான வழிகளை அவர்கள் காண்பித்தார்கள்.

ஆக ஒவ்வொரு அஹ்மதியும் இந்த பகைமையின் புயலுக்குப் பிறகும் தனது ஈமானை மேலும் முன்னேற்றமடையச் செய்து கொண்டிருக்க வேண்டும். உறுதியாக நிலைநிற்றலுக்கான இந்த உதாரணத்தில் எப்போதும் நிலைநிற்க வேண்டும். ஈமானிலும் தூய்மையிலும் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். உறுதியாக நிலைநிற்றலுக்காக துஆவும் செய்யுங்கள். ஏனென்றால் உறுதியாக நிலைநிற்றலும் அல்லாஹ்வின் அருளினாலேயே கிடைக்கப்பெறும். அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்கு அவன் முன்பு குனிவதும், அவனுக்குரிய இபாதத்துகளின் உரிமைகளைச் செலுத்துவதும் அவசியமாகும். இதைப் போன்று தனது செயல்களை முன்பை விட சிறப்பானதாக ஆக்குவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ்வின் முன்பு குனிவது தனது செயல்களைச் சிறப்பானதாக ஆக்குவது, துன்பத்திற்கு ஆளாகியுள்ள அந்த அஹ்மதிகளுடைய பணி மட்டும் கிடையாது.

மாறாக ஒவ்வொரு அஹ்மதியும் தனது நிலையை சுயமாக ஆராய வேண்டும். சிங்கப்பூரின் அஹ்மதிகளும், பர்மாவுடைய அஹ்மதிகளும், தாய்லாந்தின் அஹ்மதிகளும், உலகின் ஒவ்வொரு நாட்டிலுள்ள அஹ்மதிகளும் தனது ஈமானின் நிலையை ஆராயவில்லையென்றால், பிறகு இதில் முன்னேற்றம் அடைய முடியாது. இவ்வாறு ஈமானில் முன்னேற்றம் ஏற்படவில்லையென்றால் பிறகு அஹ்மதியாக இருப்பதால் எவ்வித பலனும் இல்லை. ஆக, ஒவ்வொரு அஹ்மதியும் தனது ஈமானிலும் உறுதிப்பாட்டிலும் முன்னேற்றம் அடைவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நான் மலேசியாவைப் பற்றியும் கூறினேன். அங்கும் எதிர்ப்பு இருக்கிறது. அங்கு திடீரென்று பிரச்சனைகள் வரும். ஆனால் இந்தோனேஷியாவின் நிலைபோன்று அங்கு இருப்பதில்லை. முஸ்லிம் அமைப்புகள் பல இடங்களில் போர்டு

வைத்துள்ளனர் எனக் கேள்விப்பட்டேன். அதில் காதியானிகள் முஸ்லிம்கள் இல்லை போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. ஓர் அஹ்மதி செல்லும் போது அதனைப் பார்த்தால் நிச்சயமாக அவரது உணர்வுகள் வேதனை அடையும். பல்வேறு இடங்களில் இவ்வாறு தரக்குறைவாக எழுதியிருப்பது ஓர் அஹ்மதியின் உள்ளத்தை வேதனை அடையச் செய்கிறது. ஆனால் அஹ்மதிகள் சட்டத்தைக் கையில் எடுக்காமல் பொறுமையை எப்போதும் வெளிப்படுத்துகின்றனர். இறைவன் அஹ்மதிகள் முஸ்லிம்கள் ஆவர் என்பதை நன்கறிவான். நாம் இந்த மக்களை விட சிறந்த முஸ்லிம்கள் ஆவோம் என்பதை அறிவோம். நமது உள்ளம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய அன்பில் நிறைந்திருக்கின்றது என்பதை அறிவோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரஸூலுல்லாஹ் என்று கூறக்கூடியவர்களைக் காஃபிர் எனக் கூறாதீர்கள் என கூறியுள்ளார்கள். ஏனென்றால் இவ்வாறு காஃபிர் என்று கூறுவது உங்கள் மீதே திரும்பி விடும். மேலும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறக்கூடியவரும் முஸ்லிம் ஆவார் எனக் கூறியுள்ளார்கள். மேலும் திருக்குர்ஆன் உங்களுக்கு ஸலாம் கூறுபவரை மூஃமின் இல்லை எனக் கூறாதீர்கள் எனக் கூறுகிறது.

ஆக இதுதான் திருக்குர்ஆனின் போதனையாகும். ஆனால் இவர்கள் தனிப்பட்ட ஓர் இஸ்லாத்தை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை தனது சுயநலம் மற்றும் சுய இச்சைகளுக்காக மற்றவர்கள் மத்தியில் ஏளனமாக ஆக்கி விட்டனர். மலேசியா ஜமாஅத்தின் சதர் சாஹிப் என்னை சந்தித்தார்கள். அவர்கள் என்னிடம் எதிரிகள் இவ்வாறு போர்டுகளை வைத்துள்ளனர். ஆனால் மக்கள் இதனைக் கண்டு கவலை அடைவதில்லை எனக் கூறினார்கள். ஜமாஅத் அல்லாத நல்லவர்களுக்கும் இது மவ்லவிமார்களின் சுயநலனாகும். அதுதான் இவ்வாறு வெளிப்படுகின்றது எனத் தெரிய வந்துள்ளது எனக் கூறுகின்றனர் என்றார்.

இவர்கள் இஸ்லாத்தை மற்றவர்கள் மத்தியில் நகைப்பிற்குரியதாக ஏளனத்திற்குரியதாக ஆக்குகின்றனர். இஸ்லாத்தை திருக்குர்ஆனின் போதனைக்கு எதிராக அல்லது தனது விருப்பப்படி ஆக்குவதற்கு விரும்புகின்றனர். ஆனால் அல்லாஹ் மற்றும் ரஸூலின் போதனையைக் கொண்டதே உண்மையான இஸ்லாம் ஆகும். மலேசியாவில் சில நாட்களுக்கு முன்பு ஒரு கிறிஸ்தவ பாதிரியார், கிறிஸ்தவர்களுக்கு, அல்லாஹ் என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம். இதனால் எந்தத் தவறும் இல்லை. அல்லாஹ் நம்முடையவன் ஆவான் எனக் கூறினார். இதைக் கேட்ட அந்த பெயர் தாங்கிய ஆலிம்கள் இவ்வாறு கூறுவதற்கு இவருக்கு எப்படி தைரியம் வந்தது? எனக் கூச்சலிட ஆரம்பித்தார். வழக்கு நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. நீதிமன்றத்தின் நிலை இவ்வாறானதாக இருந்தது. அதாவது அல்லாஹ் உடைய பெயரை முஸ்லிம்கள் மட்டும் தான் உபயோகப்படுத்த முடியும் எனத் தீர்ப்பு வழங்கியது. மேலும் அல்லாஹ் என்னுடையவன் ஆவான் எனக் கூறுவதற்கான உரிமை யாருக்கும் இல்லை எனக் கூறியது.

ஆக இந்த உலகவாதிகள் அல்லாஹ்வின் பெயரில் அல்லாஹ்விற்கு ஓர் எல்லையை ஏற்படுத்தி விட்டனர். அல்லாஹ் இந்த பெயர் தாங்கிய முஸ்லிம்களுக்கு மட்டுமே சொந்தமானவன் எனக் கருதுகின்றனர். அறிவற்ற மவ்லவிகள் இவ்வாறு கூறுவதாக இருந்தால் கூறட்டும். கல்வி அறிவு படைத்த அந்த மக்கள் மீது ஆச்சரியமாய் இருக்கிறது. அவர்கள் இந்த விசயத்தின் மூலம் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர். அல்லாஹ், அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று கூறுகின்றான். அவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரி அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் ரப் ஆவான்.

அடுத்து அல்லாஹ் اَللّٰهُ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَّشَآءُ ***அல்லாஹ் தான் நாடுகின்றவர்களுக்கு உணவை வழங்குகின்றான். (13:27)*** கிறிஸ்தவர்களுக்கு, யூதர்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு வேறு யார் ரிஸ்கை வழங்குகிறார்கள்? இவர்களது இந்த தீர்ப்பின்படி கிறிஸ்தவர்கள், அல்லாஹ் எனக்கு உணவளிக்கின்றான் என்று கூறினால் இது மன்னிக்க முடியாத குற்றமாகும். அல்லாஹ் முன்னர் தோன்றிய நபிமார்கள் மூலம் இவ்வாறு கூறச் செய்கின்றான்.

اَللّٰهَ رَبَّكُمْ وَرَبَّ اٰبَآئِكُمُ الْاَوَّلِيْنَ அதாவது *அல்லாஹ் உங்களது ரப்பும் உங்களது மூதாதையர்களின் ரப்பும் ஆவான். (37:127)*

ஆக முஸ்லிம்கள் அல்லாஹ்வை எங்கிருந்து தமக்கு மட்டும் சொந்தமாக்கிக் கொண்டனர்? பிறகு வேதம் கொடுக்கப்பட்டவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: கிறிஸ்தவர்களைப் பற்றி இவர்களைக் குறித்து மலேசியாவின் நீதிமன்றம் அல்லாஹ் என்ற வார்த்தையை முஸ்லிம்கள் மட்டும் தான் உபயோகப்படுத்த வேண்டும் எனக் கூறுகின்றது.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

قُلْ يَا أَهْلَ الْكِتَابِ تَعَالَوْا إِلَىٰ كَلِمَةٍ سَوَاءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ أَلَّا نَعْبُدَ إِلَّا اللَّهَ

***நீர் கூறுவீராக! வேதத்தை உடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் ஒன்றுபட்ட இந்த வார்த்தையின் பக்கம் அதாவது நாம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்கமாட்டோம் என்பதன் பக்கம் வாருங்கள். அதாவது முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஆவான். (3:65)*** முஸ்லிம்களுக்கு அல்லாஹ் என்று கூறுவதற்கு எவ்வாறு உரிமை உள்ளதோ அவ்வாறே கிறிஸ்தவர்களுக்கும் அல்லாஹ் என்று கூற உரிமை உள்ளது. இதைப் போன்று அனைவருக்கும் அல்லாஹ் என்று கூறுவதற்கு உரிமை இருக்கின்றது.

ஆக நான் இந்த உதாரணங்களை சில அஹ்மதிகள் என்னிடம் கேட்டதால் கூறினேன். திருக்குர்ஆன் அப்படிப்பட்ட உதாரணங்களால் நிரம்பியுள்ளது. அல்லாஹ் தன்னை அனைவருக்கும் அல்லாஹ் என்று கூறியிருக்கும் போது, எந்த மனிதரும், எந்தப் பிரிவும், எந்த மதமும், எந்த அரசாங்கமும், எந்த நீதிமன்றமும் அல்லாஹ் என்ற வார்த்தைக்கு சொந்தம் கொண்டாட முடியாது. அல்லாஹ் என்பது ஒரு Trade Mark அல்ல. அவன் அனைத்து உலகங்களுக்கும் ரப் ஆவான். இன்று உலகிற்கு உண்மையான இஸ்லாமிய போதனை என்னவென்பதை அஹ்மதிகளால் மட்டும் தான் எடுத்துக் கூற முடியும். அல்லாஹ் மற்றும் அவனது அந்தஸ்து எப்படிப்பட்டது என்பதையும் திருக்குர்ஆனின் போதனைகளின் உண்மைத்துவம் என்னவென்பதையம் அஹ்மதிகளால் மட்டும் தான் உலகிற்கு எடுத்துரைக்க முடியும்.

நான் கூறியதுபோன்று அஹ்மதியல்லாத முஸ்லிம்கள் இஸ்லாத்தை மற்றவர்கள் மத்தியில் ஏளனத்திற்குரிய பொருளாக ஆக்கி விட்டனர். எவ்வாறிருப்பினும் மலேசியாவிலுள்ள அஹ்மதிகளின் பணி என்னவென்றால் ஹிக்மத்துடன் இஸ்லாமிய போதனைகளை தனது நாட்டினருக்கு எடுத்துரைக்க வாருங்கள். அவர்களிடம் நீங்கள் இந்த பெயர் தாங்கிய உலமாக்கள் பின்னால் சென்று இஸ்லாத்தின் அழகிய போதனைகளுக்கு ஏன் அவப்பெயரை ஏற்படுத்துகின்றீர்கள் எனக் கேளுங்கள். அல்லாஹ் இவர்களது அறிவின்மையின் திரையை அகற்றுவானாக!

நான் இந்தோனேஷியா, மலேசியாவைப் பற்றி கூறினேன். வந்திருப்பதோ நமது நாட்டிற்கு; ஆனால் மற்ற நாடுகளைப் பற்றி பேசுகின்றார்களே என சிங்கப்பூர் அஹ்மதிகள் ஒருவேளை நினைக்கலாம். முதல் விசயம், அனைத்து அஹ்மதிகளும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது மூஃமின்கள் ஓர் உடலைப் போன்றவர்கள் ஆவார்கள். ஒருவருக்கு கஷ்டம் ஏற்பட்டால் மற்றவருக்கும் கஷ்டம் ஏற்படும். எனவே எந்த நாட்டில் அஹ்மதிகளுக்கு கஷ்டங்கள் கொடுக்கப்படுகிறதோ உலகிலுள்ள அனைத்து அஹ்மதிகளும் அதனை உணர வேண்டும். இரண்டாவது, நான் சிங்கப்பூரிலுள்ள அஹ்மதிகளிடம் கூறுகின்றேன். இங்குள்ள நிலைமைகள் நன்றாக இருக்கின்றது. அரசாங்கம் எந்த மதத்திற்கு எதிராகவும் பேச அனுமதிப்பதில்லை. எனவே தனது மார்க்கத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க தடை விதிப்பதும் இல்லை. ஹிக்மத்துடன் உங்களது தப்லீகின் வட்டத்தை விரிவுபடுத்திக் கொண்டே செல்லுங்கள். ஒவ்வொரு பிரிவினரிடத்தும் அஹ்மதிய்யத்தின் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதை எட்ட வையுங்கள்.

இங்கு எனக்கு முன்பு அமர்ந்திருப்பவர்களில் சிங்கப்பூரைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அல்லது வேறு நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி நாம் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது நிலைமை நன்றாக இருந்தாலும் சரி, மோசமானதாக இருந்தாலும் சரி அஹ்மதி முஸ்லிம்களாகிய நாம் தான் இஸ்லாத்தின் அசல் முகத்தை உலகிற்குக் காட்ட வேண்டும். இஸ்லாம் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வரலாறு, அன்னாரது வாழ்வின் அழகிய பகுதிகளை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்களுடைய வாழ்வின் எந்த பகுதியினை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ், பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் உண்மையான முஸ்லிம்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரியாகும் எனக் கூறுகின்றான். அது குடும்ப விசயமாக இருந்தாலும் சரி, சமூகப் பிரச்சனையாக இருந்தாலும் சரி, மற்றவர்களுடைய பிரச்சனையாக இருந்தாலும் சரி அல்லது மற்ற சமுதாயங்களுடையதாக அல்லது மற்ற நாடுகளுடையதாக இருந்தாலும் சரி, பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு ஒரு முழுமையான முன்மாதிரி ஆவார்கள்.

ஆக நாம் மற்றவர்களுக்கு முன்பு அன்னாரது வாழ்க்கையை எடுத்துரைக்க வேண்டும் என்றால், தானும் இதன்படி செயல்பட வேண்டும். தனது செயல் முன்மாதிரியின் மூலம் மற்றவர்களை இஸ்லாத்தின் பால் ஈர்க்க வேண்டும். ரஹ்மத்துல் லில் ஆலமீன் உடைய முகத்தை உலகிற்குக் காட்ட வேண்டும் என்றால், தானும் ஒவ்வொரு நிலையிலும் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான உதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும். திருக்குர்ஆனின்

உண்மையான போதனைகளை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும் என்றால், உலகிற்கு இதனை கூற வேண்டும். அதாவது திருக்குர்ஆனின் போதனைகளைப் புரிவதற்கு அல்லாஹ் தனது நபி மற்றும் நபி (ஸல்) அவர்களுடைய உண்மை நேசரை அனுப்பி இருக்கின்றான். அவருடன் இணையாத வரை இந்த போதனைகளின் உண்மையைப் புரிய முடியாது. நீங்கள் காலத்தின் இமாமுடன் இணையவில்லை என்றால், பிறகு ஒருவர் மீது ஒருவர் குஃப்ர் ஃபத்வாவைத் தான் கொடுத்துக் கொண்டிருப்பீர்கள். இது இல்லாமல் ஏனைய மதத்தவர்களை இஸ்லாத்திற்கு அருகில் கொண்டு வருவதற்குப் பதிலாக இஸ்லாத்தை விட்டு விலகிச் செல்லக்கூடியவர்களாக ஆக்கி விடுவீர்கள்.

ஆக ஒவ்வொரு அஹ்மதி உடைய பணி என்னவென்றால் இறைவனது கருணைக்கு நன்றி உள்ளவராய் ஆகுங்கள். அவன் நம்மை நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பிற்கேற்ப வரக்கூடிய காலத்தின் மஸீஹ் மவ்வூது மற்றும் மஹ்தியே மவ்வூதை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளான். ஆனால் இந்த நன்றி செலுத்துவது என்பது எவ்வாறு நடைபெறும்? இந்த நன்றி செலுத்துவதற்கு நாம் நமது விருப்பங்களை சரியான இஸ்லாமிய போதனையின்படி அமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். உங்களது உணர்வுகளை தியாகம் செய்ய வேண்டும். உண்மையான போதனையைப் புரிவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் இந்த நன்றி செலுத்துவது நிறைவேறும்.

ஆக இதன் பக்கம் நாம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். பேசுவதற்கு பல விசயங்கள் இருக்கின்றன. ஆனால் எல்லா விசயங்களையும் விளக்கமாக எடுத்துரைப்பதற்கு தற்போது நேரமில்லை. மேலும் இது அல்லாஹ்வின் கருணையாகும். இக்காலகட்டத்தில் அதிக தொலைவுகள் இருந்தும் கூட அல்லாஹ் M.T.A. மூலமாக ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தின் தொடர்பை இணைத்து விட்டான். எனவே எனது குத்பாக்களையும், ஏனைய பல்வேறு நிகழ்ச்சிகளையும் கண்டிப்பாக கேளுங்கள். நான் ஆய்வு செய்த போது, அதில் சில பொறுப்பாளர்கள் கூட குத்பாக்களைத் தொடர்ந்து கேட்பதில்லை எனத் தெரிய வந்துள்ளது. இந்த குத்பாக்களை காலத்தின் தேவைக்கேற்ப கொடுக்கவே நான் முயற்சி செய்கின்றேன். எனவே உங்களை கண்டிப்பாக இதனுடன் இணைத்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் உலகில் ஒவ்வொரு இடங்களிலும் இஸ்லாம், அஹ்மதிய்யத்தின் போதனைகளின் தனித்துவம் வெளிப்பட வேண்டும்.

இறுதியில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சில மேற்கோள்களை உங்கள் முன் வைக்கின்றேன். அதன் மூலம் அன்னார் தனது ஜமாஅத்தை எந்தத் தரத்தில் பார்க்க விரும்புகின்றார்கள் என்பது தெரிய வரும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என எடுத்துக் கொண்ட உறுதிமொழியை எப்போதும் கவனித்து வாருங்கள். இதன்படியே வாழ்வில் செயல்பட்டு சிறந்த முன்மாதிரியைக் காட்டுங்கள்.

அடுத்து அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனுடைய உதவி யாருக்கு கிடைக்கும் என்றால் எப்போதும் நன்மையில் தனது பாதத்தை முன்னே எடுத்துச் செல்லக் கூடியவர்களுக்கு தான் கிடைக்கும். அவர்கள் ஓரிடத்தில் நின்று விடுவதில்லை. இவர்களது முடிவே சிறந்ததாக இருக்கும்.

மேலும் கூறுகின்றார்கள்: அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த துஆவைக் கற்றுத் தந்துள்ளான்.

وَأَصْلِحْ لِي فِي ذُرِّيَّتِي ***எனது மனைவி மக்களையும் சீர்திருத்துவாயாக! (46:16)*** தனது நிலையில் தூய மாற்றம் மற்றும் துஆவுடன் தனது பிள்ளைகளுக்காகவும் மனைவிக்காகவும் துஆ செய்து வர வேண்டும். ஏனெனில் மனிதன் மீது பெரும்பாலான குழப்பம் பிள்ளைகள் மூலமாகவே வருகின்றன. மேலும் பெரும்பாலானவை மனைவி மூலமாகவும் வருகின்றன. அடுத்து கூறுகின்றார்கள்: உங்கள் செயல்கள் நீங்கள் அஹ்மதி ஆனதற்கு சாட்சி பகர வேண்டும்.

கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத் இந்த விசயத்தை அதிகமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ்வை எந்நிலையிலும் மறக்கக் கூடாது. எந்நேரமும் அவனிடமே உதவி கோர வேண்டும். அவன் இல்லாமல் மனிதன் ஒன்றுமேயில்லை.

ஆக நம்மில் ஒவ்வொருவரும் தன்னை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது. எந்த அளவு நம்மிடம் தூய மாற்றம் உள்ளது? எந்த அளவு நாம் நமது பிள்ளைகளை ஜமாஅத்துடன் இணைப்பதற்கு முயற்சிகளைச் செய்கின்றோம்? எந்த அளவு நாம் திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படுகின்றோம்? நமது செயல்களைப் பார்த்து பிற முஸ்லிம்கள் இவர்கள் நம்மை விட சிறந்த முஸ்லிம்கள் எனக் கூற வேண்டும். இஸ்லாத்தின் பகைவர்கள் நம்மைப் பார்த்து இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்படுகின்ற அளவுக்கு நமது முன்மாதிரிகள் இருக்கின்றனவா? நாம் இந்த தரத்தை

அடைகின்றோம் என்றால், பிறகு இந்த விசயங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரக்கூடியதாகவும் நாம் நமது எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காகவும் காரணமாக அமையும். மேலும் ஜமாஅத்திற்கு எதிராக உள்ள பகைமையும் ஒருநாள் காற்றில் பறந்து விடும்.

அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் எனக்கும் ஈமான் மற்றும் உறுதிப்பாட்டில் முன்னேற்றத்தை வழங்குவானாக! ஒவ்வொரு நொடிப்பொழுதும் உங்கள் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! மேலும் எதிரியின் ஒவ்வொரு திட்டத்தையும் மண்ணோடு மண்ணாக்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRAT KHALIFATUL MASIH V**
at **TA HA MOSQUE,** Singapore
on **27.09.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456